Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals — since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2016-2017

- **Endeavour** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Dec. 16 : 999 Nos.
  - Up to Nov. 16 : 996 Nos.
- **Performance Dec. 16 …**
  - Turnover growth : 2.74%
  - Employment growth : -1.55%
  - 100% Attendance : 4.14%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® Innovation In Inert Metals – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil Results for environment – Water Treatment Equipments.

Fib Tec COMPOSITE – FRP/ GRP Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculum)

### ACHIEVEMENT CHART




## அன்பைக் கொடு!

அன்பை வெளிப்படுத்தும் எதையும் கொண்டு வாருங்கள் என்று நான்கு மாணவிகளை அனுப்பினார் ஆசிரியை.

திரும்பி வந்த ஒரு மாணவியின் கைகளில் மலர் இருந்தது. இன்னொரு மாணவியிடம் வண்ணத்துப் பூச்சி இருந்தது. மற்றொரு மாணவியிடம் ஒரு சின்னப் பறவை இருந்தது. முதலில் கிளம்பிப்போன மாணவியோ கடைசியில் வெறுங்கையோடு திரும்பி வந்தாள். ஏனென்று கேட்டபோது

சொன்னாள், "நானும் மலரைப் பார்த்தேன். அழகாய் இருந்தது. செடியிலேயே இருக்கட்டும் என்று விட்டுவிட்டேன்.

வண்ணத்துப் பூச்சியைப் பார்த்தேன் தாய்ப்பறவை தேடுமென்று விட்டுவிட்டேன்…" .

அந்த மாணவியை அணைத்துக் கொண்ட ஆசிரியை சொன்னார், "அன்பு என்றால் இது தான்!".

ஒன்றுமே கொடுக்க வேண்டாம், எதையுமே பறிக்காமல் இருந்தால் அதுவே போதும். எதையும், யாரையும் காயப்படுத்தாமல் இருப்போமே…

நாம் உலகிற்கு எதையேனும் கொடுக்க வேண்டுமென நினைத்தால் அன்பைக் கொடுப்போம். ஏனெனில் உலகில் எங்கும் பரவிக் கிடப்பது அன்பு ஒன்று தான். ஆனால் உலகம் அதிகமாக ஏங்கிக் கிடப்பதும் அதே அன்புக்காகதான் என்பதை புரிந்தவர்களாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வோம்! நன்மைகள் பல பெறுவோம்.

"விட்டு கொடுத்தவர் கெட்டு போனதில்லை
கெட்டு போனவர் விட்டு கொடுத்ததில்லை"

**இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

*Compiled By : Ms. P. E. Nancy*
Director - Admin

## எந்த பெருமையும் சேராது

சீனப்பேரரசர் வூ என்பவர் புத்த மதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். புத்த துறவியான போதி தர்மர் ஒரு முறை அரண்மனைக்கு வந்தார். அவரைச் சிறப்பாக வரவேற்றார் பேரரசர்.

துறவியை வணங்கிய அவர் "நான் புத்தருக்குப் பல கோயில்கள் கட்டியுள்ளேன். புத்த மத நூல்களை நன்றாக படித்துள்ளேன். புத்த மதத்தில் நான் பலரைச் சேர்த்துள்ளேன். இவ்வளவு நல்ல செயல்கள் செய்த எனக்கு என்ன சிறப்புகள் கிடைக்கும்? தாங்கள்தான் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்.

அதற்குத் துறவி, "நான்" என்ற ஆணவம், "நான்தான் செய்தேன்" என்று தற்பெருமை உள்ள வரை எவ்வளவு நல்ல செயல்கள் செய்தாலும் ஒருவனுக்கு எந்தப் பெருமையும் வந்து சேராது என்று பதில் தந்தார்.

— திருச்சிராப்பள்ளி ஸ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## FUNCTIONAL WISHES



Maha Shivaratri
25th February

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. C. Sounder Suresh**<br>Purchase | **02nd Feb.** |
| **Mr. V. Babu**<br>Administration | **05th Feb.** |
| **Mr. S. Kumaresan**<br>Production | **09th Feb.** |
| **Mr. P. Girish**<br>Production | **23rd Feb.** |
| **Ms. P. Nirmala Devi**<br>Production | **25th Feb.** |
| **Mr. S. Govindarajan**<br>Production | **29th Feb.** |

**Best Wishes from Tiaano Employees**

### தலைவலி குறைய

பெரும்பாலும் பலருக்கு தலைவலி ஒரு முக்கிய உபாதையாக உள்ளது. இந்த உபாதையை தீர்ப்பதற்கு சிறந்த மருந்து இதோ, கற்பூரவல்லி இலையை நன்கு சுத்தம் செய்து, இடித்துச் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும், அந்த சாற்றுடன் நல்லெண்ணெய், சர்க்கரை ஆகியவற்றை கலந்து நன்கு கலக்கி நெற்றியில் பற்று போட்டு வந்தால் தலைவலி குறையும்.

*Collected from Internet*

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

வாஷிங்டனில் வீதியோரமாய் அந்த வயலின் கலைஞர் வாசித்துக் கொண்டிருந்தார். நாற்பத்தைந்து நிமிடங்கள். அற்புதமான இசை. நின்று பார்த்தவர்கள் ஆறுபேர்கள் மட்டுமே. அவர்களும் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். நின்று பார்க்க விரும்பிய குழந்தைகளை, நேரமாகிவிட்டதென்று பெற்றோர் இழுத்துச் சென்றார்கள். அவர் முன் விழுந்த தொகை 32 டாலர்கள்.

அமர்ந்திருந்த இசைக் கலைஞர் எழுந்த பிறகு தான் தெரிந்தது, அவர் புகழ்பெற்ற இசைக் கலைஞர் ஜோஷ்வாபெல் என்பது. வாஷிங்டன் போஸ்ட் ஏற்பாடு செய்திருந்த அதிர்ச்சி வைத்தியம் இது.

அடையாளம் தெரியாத திறமைகளை அலட்சியம் செய்வது பெரும் தவறென்று புரிந்தது பலருக்கும்.

— கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலீருந்து தொகுக்கப்பட்டது

### பொறுப்புணர்ச்சி

நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சர்.சி.வி.ராமன். அவருக்கு உதவியாளர்கள் தேவைப்பட்டது. அதற்கான நேர்முகத்தேர்வு நடத்தினார்.

ஒரு இளைஞன் வந்தான். “உனக்கு விஞ்ஞானத்தில் ஈடுபாடு உண்டா? அதைப் பயின்றிருக்கிறாயா?”

“அதில் எனக்குப் பயிற்சி இல்லை ஐயா!” என்றான் இளைஞன்.

“விஞ்ஞான அறிவு இல்லாதவனை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?” என்ற சர்.சி.வி.ராமன் “நீ போகலாம்” என்றார்.

அவன் ஏமாற்றத்துடன் வெளியேறினான். தற்செயலாக வாசற்புறத்தை நோக்கிய சர்.சி.வி.ராமன், வாசலில் அந்த இளைஞன் நடந்து கொண்ட முறையைக் கவனிக்க நேர்ந்தது.

மீண்டும் அவனை அழைத்து, “நீ வேலையில் சேர்ந்தாயிற்று” என்றார்.

காரணம்? வாசற்புறத்தில் அவன் கண்ணில் பட்ட குண்டூசியை எடுத்துப் பொறுப்பாக ஒரு இடத்தில் வைத்து விட்டு நகர்ந்தான்.

ஏமாற்ற நிலையிலும் அவனுடைய பொறுப்புணர்ச்சி அவரைக் கவர்ந்ததால், வேலை போட்டுக் கொடுத்து விட்டார்.

விஞ்ஞான அறிவை விட பொறுப்புணர்ச்சிதான் அதிக தகுதி என்று கருதினார், அந்த நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி.

### திருந்திய மனம்

ரமண மகரிஷியிடம் மிகுந்த பக்தி கொண்டு இருந்த அன்பர் ஒருநாள் அவரை தரிசித்து சொன்னார், “சுவாமி! இதுநாள் வரை தீயவனாகவே இருந்து விட்டேன். இப்போது மனம் திருந்தி விட்டேன். இனிமேலாவது நல்லவனாக வாழ விரும்புகிறேன். என்ன உறுதிமொழி எடுத்துக்கொண்டு நான் எனது புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்?”

பகவான் ரமண மகரிஷி சொன்னார், “இனிமேல் பொய் சொல்ல மாட்டேன்”.

— திருச்சிராப்பள்ளி ஸ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

# Tiaano Vidyashrm

## Celebrations

### Experiential Learning & Campfire – $20^{th}$ December

Experiential Learning program was organized on $20^{th}$ December for the Students of Std IV. The resource persons were Mr. &Mrs. Prince Solomon Prof. (MSW.) Madras Christian College. Students played games, danced and had a wonderful counseling session. The one night stay program proved fruitful. Children learned many values.





### Dengue Awareness Rally – $22^{nd}$ December

The students of Tiaano Vidyashrm went on a dengue awareness rally from Mudichur to Mannivakkam. They went on a long procession shouting slogans on cleanliness and eradication of dengue.






### Christmas – $23^{rd}$ December

Christmas was celebrated on 23rd December. Children performed the nativity scene and danced to the bells of Christmas music. They stood in the formation of a star & wished each other. The arrival of Santa Clause marked the occasion.





*Compiled By : Mrs.Suguna Davidraj*

Principal – Tiaano Vidyashrm

## கவிதைகள்

### வாழ்க்கை கணக்கு

வாழ்க்கையில்,
அன்பை கூட்டிக்கொள்!
அறிவை பெருக்கிக்கொள்!
இனிமையை
தனிமையால் வகுத்துக்கொள்!
பாவத்தைக் கழித்துக்கொள்!
பிறருடன் சமமாக
வாழ கற்றுக்கொள்..!

### துணிவே துணை

கலங்கி நின்றால்
கண்ணில் விழும்
தூசி கூட துயரம்!
துணிந்து விடு
தூணே விழுந்தாலும் தூசி!

### உழைப்பு

மேகத்தின் வியர்வை
கடல் சிப்பிக்குள்
விழுந்து முத்தாகிறது...
உழைப்பாளியின் வியர்வை
காலச் சிப்பிக்குள்
விழுந்து வாழ்வாகிறது...

*Collected From Internet*

## ஹைக்கூ

தோல்வியில்லாத வெற்றி இனிக்காது
முயற்சியில்லாத கனவு பலிக்காது..!!

## சிந்தனைக்கு

### ஏக்கம்

கழனிகளில் மாடி வீடுகள்...
ஏக்கத்துடன் பறவைகள்...
எப்படி இனி உணவு கிடைக்கும்
மனிதர்களுக்கு...

**பணியாளர்கள் மற்றும்** பணியாளர் களின் குடும்பத்தாரிடமிருந்து **கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி LXI)

### அழுக்கு எது? சுத்தம் எது?

'செய்சோ'வைச் செயல்படுத்த விரும்புகிறவர்கள், முதல் வேலையாகத் தங்களுடைய பணியிடத்தின் விளக்குகள் மற்றும் வெளிச்ச ஏற்பாடுகளைக் கவனிப்பது அவசியம்.

நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் தொழிலாளிகளின் கண் ஆரோக்கியத்துக்கு நல்லது. அப்போதுதான் குப்பைகளும், அசுத்தங்களும் பளிச்சென்று தெரியும்.

அடுத்து – சுவர், தரை, கூரை வண்ணங்கள், இயந்திரங்கள், கருவிகளின் மீது பூசப்பட்டிருக்கும் வண்ணங்கள் ஆகியவற்றை ஆராய வேண்டும்.

பெரும்பாலான உணவகங்கள், முக்கியமாக '.:.பாஸ்ட் .:.புட்' வகைக் கடைகளைக் கவனித்துப் பார்த்தால், அவற்றின் சுவர்களில் மூன்று வண்ணங்கள் பிரதானமான இடத்தைப் பிடித்திருக்கும்.

ஆரஞ்சு, சிவப்பு, மற்றும் மஞ்சள் ஆகிய அந்த நிறங்களுக்கு, மனிதர்களுடைய பசியைத் தூண்டுகிற தன்மை உண்டு என்று ஓர் ஆய்வு சொல்கிறது. அதனால்தான், நமக்கு நன்கு பசித்து நன்கு புசிக்கச் செய்வதற்காகவும், அவர்களுடைய வியாபார வளர்ச்சிக்காகவும் உணவகங்கள் அந்த நிறத்தை தேர்வு செய்கின்றன.

ஆனால், தொழிற்சாலைச் சுவர்கள் மற்றும் இயந்திரங்களின் மீது இதுபோன்ற 'பளிச்' வண்ணங்களைப் பார்க்கமுடியாது. பெரும்பாலும் கறுப்பு அல்லது அடர்த்தியான பழுப்பு அல்லது பிரௌன் நிறங்களைத் தான் பூசியிருப்பார்கள்.

தொடரும்...

### Scale Remover

